வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு
மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

# பெறுகை அறிவித்தல்

## வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக புறப்படும் தொழில் பெறுநர்கள் மற்றும் விசேட வேளைகளுக்கு உணவு பானங்கள் வழங்குதல் மற்றும் உபசார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் - PR/02/01-01(1)

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால், வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக புறம்படும் தொழில் பெறுநர்கள் மற்றும் ஏனைய விசேட வேளைகளுக்கு உணவு பானங்கள் வழங்குதல் மற்றும் உபசார நடவடிக்கைகளின் பொருட்டு வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழ் சகிதம் மேற்கூறப்பட்ட வேலைகள் தொடர்பில் சிறந்த அனுபவம் மற்றும் முகாமைத்துவம் உள்ள நிறுவனங்களிடமிருந்து 2025-08-04ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை தேசிய போட்டி ரீதியான கேள்வி நடைமுறைகளின் ஊடாக முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விகளுடன் கேள்விதாரரின் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியொன்றுடன் சான்றுபடுத்திய பிரதியொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும். பரீட்சித்துப் பார்த்ததன் பின் மூலப் பிரதி அவ்வேளையிலேயே மீண்டும் ஒப்படைக்கப்படும்.

மீளளிக்கப்படாத 10,000.00 ரூபா வைப்புத் தொகையை பணியகத்தின் காசாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தி 2025-07-14ஆம் திகதி முதல் 2025-08-03ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து கேள்வி மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அம்மாதிரிப் படிவங்களைப் பூர்த்தி செய்து இரு பிரதிகளில் விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். பணியகத்தின் பெறுகைப் பிரிவில் கடமை நேரங்களில் இலவசமாக கேள்வி கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை பின்வரும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பெறுகைப் பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''உணவு பானங்கள் வழங்குதல் - **PR/02/01-01(1)**'' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல் 2025-08-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நிறைவுறும் என்பதுடன், அந்த வேலை நிறைவடைந்தவுடன் கேள்விப் படிவங்கள் திறக்கப்படும். கேள்விப் படிவங்களைத் திறக்கும் வேளையில் கலந்து கொள்வதற்கு கேள்விதாரர் அல்லது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவருக்கு அனுமதி வழங்கப்படும்.

இந்தக் கேள்வி சம்பந்தமான இறுதித் தீர்மானத்தை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்,
இலக்கம் 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
கொஸ்வத்த, பத்தரமுல்ல.

தொலைபேசி இல. 011-2880500, 011-2887585
மின்னஞ்சல். mgr_procurement@slbfe.lk
இணையதளம்: www.slbfe.lk

''அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்போம்''